


திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தென்காசி மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டத்தில் அண்மையில் மறைந்த முரசொலி செல்வம் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. தென்காசி மாவட்ட திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செயல் வீரர்கள் கூட்டமும் புதிதாக நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்பும் மேக்கரை மோகன் ரிசார்ட்ஸில் 19.10.2014 அன்று, மாவட்டத் தலைவர் சேக்கிழார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் தொடக்கத்தில், திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன், துணைப்பொதுச்செயலாளர் வைரமுத்து, மாணவர் பேரவை அமைப்பாளர் நெல்லை பாபு, இளைஞரணி சந்தானம், மாவட்டச்செயலாளர் அருள்ஜோதிவ் பாபா மற்றும் பேரவைத் தோழர்கள் அலங்கரிக்கப்பட்ட முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினர்.

### சுவாமி விவேகானந்தரின் கோத்திரக் கேள்விக்கு

# மனோன்மணியம் சுந்தரனார் கூறியது என்ன?

## ஆளுநருக்கு பீட்டர் அல்போன்ஸ் பதிலடி!

சென்னை,அக்.20-

**சுவாமி விவேகானந்தரின் கோத்திரக் கேள்விக்கு மனோன்மணியம் சுந்தரனார் அளித்த பதில் குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் பீட்டர் அல்போன்ஸ் தமது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டு ஆளுநர் ரவிக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து பீட்டர் அல்போன்ஸ் தமது 'எக்ஸ்' வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-



சென்னை டிடி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பாடப்பட்ட தமிழ்த் தாய் வாழ்த்தில் "தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்" என்ற உன்னதமான வரிகளை விட்டுவிட்டு பாடியது மன்னிக்க முடியாத மாபெரும் தவறு. பாடியவர்கள் அந்த வரிகளை மறந்து விட்டனர் என்று டிடி சொல்வது பெரும் அபத்தம். குழுவிலே பாடிய அனைவருக்கும் ஒரே நேரத்தில் அந்த ஒரு வரி மட்டும் மறந்துபோனது என்று நம்புவதற்கு எட்டு கோடி தமிழர்களும் இளிச்சவாயர்களல்ல.

தமிழ்த்தாய் வாழ்த்தை 'ரசித்துப்' பாடுவேன் என்று புளகாங்கிதம் அடையும் ரவி, தவறு நடந்தவுடனே தவறைத் திருத்தி மீண்டும் சரியாக பாடவைத்திருக்க வேண்டும்.

ஒரு தவறு நடக்கும் போது, நடப்பது தவறென்று தெரிந்தபின்னரும் அந்தத் தவறை கண்டும் காணாதது போல நடந்துகொள்வது கயமை நிறைந்த பாசாங்குத் தனம்.

தமிழ்நாட்டின் உணர்வுகளை தொடர்ந்து அவமதித்து வரும் ஆளுநரை ஒன்றிய அரசு உடனே திரும்பப் பெறவேண்டும் என்ற முதலமைச்சரின் கோரிக்கை மிகச்சரியானது.

அந்த அற்புதமான வாழ்த்தை உயிரும்,உணர்வும் கலந்துபாடிய மனோன்மணியம் சுந்தரனார் வானுலகில் இன்று கண்ணீர் விட்டு அழுதிருப்பார். இது தொடர்பாக அவரது வாழ்வில் ஒரு முக்கிய செய்தி.

திருவனந்தபுரத்தில் சுந்தரனார் இல்லத்திற்கு சுவாமி விவேகானந்தர் வருகிறார். உணவருந்திய பின் உரையாடிக் கொண்டிருந்தபோது விவேகானந்தர், சுந்தரனாரிடம்,"தாங்கள் என்ன கோத்திரம்?"என்று கேட்க சுந்தரனார் சொன்ன பதிலை தனது நாட்குறிப்பில் பதிவு செய்துள்ளார். " வேறு ஒரு தினமாகில் வினாவினைக் கேட்டவுடன் நான் வெகுண்டிருப்பேன். உறவின் விருந்துக்கு வந்த அந்த உயர்ந்த நண்பரிடம் நான் மெல்லிய குரலில் எனக்கும் கோத்திரத்துக்கும் சம்பந்தம் கிடையாது. தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சார்ந்தவன் நான் என ஆத்திரமின்றி கோத்திரக் கேள்விக்கு விடையளித்தேன்" என்று தனது நாட்குறிப்பில் எழுதியுள்ளார்.

ஆம்!ஆளுநர் ரவி அறிய வேண்டும்.நாங்கள் தன்மானம் காக்கும் தென்னாட்டில் பிறந்த திராவிட இனத்தைச் சார்ந்தவர்கள்.

இவ்வாறு பீட்டர் அல்போன்ஸ் தமது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

### சட்டமன்ற உறுப்பினர் க.கணபதி பங்கேற்பு!

# 153வது வட்ட நிர்வாகிகள் - பாக முகவர்கள் கூட்டம்!

## வட்டச் செயலாளர் சி.சார்லஸ் அறிக்கை!

சென்னை, அக்.20-

தமிழ்நாட்டின் முதலமைச்சர் கழக தலைவர், துணை முதலமைச்சர் ஆகியோரின் ஆணையின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலோடு இன்று (20-10-2024 - ஞாயிறுக்கிழமை) காலை 10:00 மணியளவில் 153வது வட்ட நிர்வாகிகள் கூட்டம் குன்றத்தூர் சாலை எஸ்.வி. மஹால் போரூரில் மதுரவாயல் தெற்கு பகுதி செயலாளரும் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினருமான காரம்பாக்கம் க.கணபதி கலந்து கொண்டு நவம்பர் 9,10 மற்றும் 23,24 ஆகிய தேதியில் வாக்குசாவடி மையங்களில் வாக்காளர் சேர்ப்பு, நீக்கல், மாற்றம் முதலியவை மேற்கொள்ள தேவை யான பணிகள் குறித்து ஆலோசனை வழங்க உள்ளார்.

எனவே இக்கூட்டத்திற்கு பகுதி, கழக நிர்வாகிகள், மாமன்ற உறுபினர், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதி, பல்வேறு அணிகளின் 153வது வட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகம் முகவர்கள் தவறாமல் கலந்து கொள்ளவும்.

இவ்வாறு வட்ட கழக செயலாளர் சி.சார்லஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.





